சுருக்கம்

பணியமைப்பு – இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனைகளுக்கு பத்மாவதி ஏஜென்ஸி மூலம் மருத்துவ பணியாளர்கள் மற்றும் காவலர்கள் ஒப்பந்த முறையில் பணியமர்த்துதல் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (சி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.202

நாள்.11.07.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய ஆனி–27

படிக்க

1) அரசாணை (நிலை) எண்.325, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.20.11.2012.
2) சிறப்பு அலுவலர், தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனை அவர்களின் கடிதம் எண்.51/OSD/MSSH, நாள்.13.12.2013.
3) திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், கடித எண்.11694/TNHSP/OHSS/2014, நாள்.12.05.2014.
4) மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.98765/E4/3/2013, நாள்.21.05.2014.

====

**ஆணை**

மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனை, சிறப்பு அலுவலர் அவர்கள் தனது 13.12.2013 நாளிட்ட கடிதத்தில் அம்மருத்துவமனையின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள பத்மாவதி ஏஜென்ஸி நிறுவனத்தின் மூலமாக 586 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் 180 பாதுகாவலர்கள் பணி நியமனம் செய்து தருமாறு கோரியுள்ளார் என்றும், மேலும் தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் தனது 12.05.2014 நாளிட்ட கடிதத்தில் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் புதிய அடுக்குமாடி கட்டிடமான I மற்றும் II–ற்கு பத்மாவதி ஏஜென்ஸி மூலம் 450 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் 72 பாதுகாவலர்களை ஒப்பந்தம் அடிப்படையில் பணி நியமனம் செய்யவும் மற்றும் 2014–2015 ஆண்டிற்கு மேற்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் மற்றும் இயந்திரம் வாங்குதல் போன்றவற்றிற்கு ரூ.4,54,71,264/– நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு கோரியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்கள் மருத்துவக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 31 மருத்துவமனைகளின் சுகாதாரப் பணிகள் மற்றும் பாதுகாப்பிற்காக மொத்தம் 5975 பணியாளர்கள் தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மூலம் தேர்வு செய்யப்பட்ட நிறுவனமான பத்மாவதி ஏஜென்சியின் மூலம் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு புற ஆதார முறையில் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் என்றும், இதன் மூலம் ஆண்டிற்கு 50 விழுக்காடு செலவினம் குறைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி 31 மருத்துவமனைகளின் பாதுகாப்பு மற்றும்

சுகாதார மேம்பாடு சிறப்பாக உள்ளதாலும் மேற்காணும் நிலையத் தலைவர்களின் கோரிக்கையினை ஏற்று அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனை மற்றும் தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனைகளுக்கு கீழ்கண்டவாறு பணியாளர்கள் நியமனம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

| மருத்துவமனைகள் | மருத்துவப் பராமரிப்புப் பணியாளர்கள் | காவலர்கள் |
|---|---|---|
| ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை | 450 | 72 |
| தமிழ்நாடு அரசு ஓமந்துாரார் பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை | 586 | 180 |
| மொத்தம் | 1036 | 252 |

மேற்படி இரண்டு மருத்துவமனைகளுக்கும் பணியாளர்களை புற ஆதார முறையில் ஒப்பந்த அடிப்படையில் பத்மாவதி ஏஜென்சி மூலம் பணி நியமனம் செய்யவும், மேலும் இப்பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ரூ.10,66,76,651/–ற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

2. மருத்துவக் கல்வி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனை அடுக்குமாடி கட்டிடம் I மற்றும் II–ற்கு 450 பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள் மற்றும் 72 காவலர்கள் புற ஆதார முறையில் தொடர்ந்து பத்மாவதி ஏஜென்சி மூலம் பணியமர்த்த 01.07.2014 முதல் ஓராண்டு காலத்திற்கு தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழக உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட சூழ்நிலையில் ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையின் அடுக்குமாடி கட்டிடம் I மற்றும் II மற்றும் தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பணியாளர்களை ஒப்பளிக்கவும், அவ்வூழியர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு ரூ.5,41,79,940/– (ரூபாய் ஐந்து கோடியே நாற்பத்தியோரு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

| மருத்துவமனைகள் | | பல்நோக்கு மருத்துவப் பணியாளர்கள் | காவலர்கள் |
|---|---|---|---|
| ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை | – | 450 | 72 |
| தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை | – | 200 | 35 |
| மொத்தம் | – | 650 | 107 |

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 – நகர்பகுதி சுகாதார பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் – 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I – திட்டத்தில் சேராதது – EE – புற ஆதார முறையில் பணியமர்த்தும் ஒப்பந்த முகமைகளுக்கு தொகை கொடுத்தல் – 33 – தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 – ஒப்பந்த ஊதியம்".
(த.தொ.கு–2210–01–110–EE-3343)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.29023/சுகாதாரம்–II/2014, நாள்.18.06.2014–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு சுகாதார திட்டம், சென்னை–6.
சிறப்பு அலுவலர்,
தமிழ்நாடு அரசு பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனை,
ஓமந்தூரார் தோட்டம், சென்னை–2.
முதல்வர்,
அரசு ராஜீவ்காந்தி பொது மருத்துவமனை, சென்னை–3.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1/35.
மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் வருவாய்), சென்னை–18.

நகல்
நிதித் (சுகாதாரம்–II/வ.செ.2) துறை, சென்னை–9.
தரவு பிரிவு,
இ.கோ/உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
11/7/14